# Copy of Deposition

## சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண்.15/2024

பெயர்:–மகாதேவன் நாள்:23.03.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–(வாதி தரப்பில்)

இந்த வழக்கில் முதல் அயிட்ட சொத்து பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டது என்றால் என் அப்பாவின் அப்பா வாங்கியது. வாதி சிவானந்தம் இரயில்வே துறையில் வேலை செய்வதற்கு முன்பு நீல்கிரீஸ் பால்பண்ணையில் வேலை செய்தார் என்றால் சரிதான். நான் அப்போது இரயில்வேயில் வேலையில் இருந்தேன் என்றால் ஆமாம். 1981ல் இருந்து வேலையில் இருந்தேன். எனக்கு அந்த சமயத்தில் திருமணமாகவில்லை என்றாலும், வாதிக்கும் திருமணம் ஆகவில்லை என்றாலும் சரிதான். அப்போது நான், வாதி, அப்பா, அம்மா அனைவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோமா என்றால் எனக்கு திருமணம் ஆவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு நான் வெளியில் வந்துவிட்டேன். தாவா 2வது அயிட்ட சொத்து 01.07.1981ல் எனது அப்பா பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 1987ம் வருடத்தில் பூசா கவுண்டரும், சுப்பையனும் பஞ்சாயத்தார் முன்பு பாகபிரிவினை செய்து கொண்டார்களா என்றால் ஆமாம். அதன்படி Aஷெட்யூல் சொத்து பூசா கவுண்டருக்கும், B ஷெட்யூல் சொத்து சுப்பையனுக்கும் 24.08.1987ம் தேதியிட்ட வா.த.சா.ஆ.3 பஞ்சாயத்து பாகபிரிவினை பத்திரப்படி பிரித்துக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி B ஷெட்யூல் சொத்தை சுப்பையன் 03.10.2001ம் தேதியில் சண்முகத்திற்கு வா.த.சா.ஆ.4 கிரைய ஆவணப்படி கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். மேற்படி சண்முகத்திற்கு விற்பனை செய்த கிரையத்தைதான் வாதி வா.த.சா.ஆ.5 கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 08.01.2008ம் தேதியிட்ட உயில் சாசனம் பி.வா.த.சா.ஆ.4 பதிவு செய்யப்படாத உயில் சாசனம் என்றால் சரிதான். என்னிடம்

## Copy of Deposition

காட்டப்படுவது பி. வா.த.சா.ஆ.4 உயில் சாசனம்தான் அது என்றால் சரிதான். என் அப்பா காலமான தேதி 21.01.2008என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை தான் 8ம் பிரதிவாதியான எனது மனைவி இளையராணிக்கு 11.11.2008ல் தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தில் முறையான கட்டிட அனுமதி பெற்று கட்டிடம் கட்டியுள்ளேனா என்றால் ஆமாம். அதற்கான கட்டிட அனுமதி பொறுத்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பதிவு செய்யப்படாத உயில் சாசனம் வா.த.சா.ஆ.4 ஆவணத்தின் உண்மை தன்மையை நிரூபிக்க நீதிமன்றத்தில் வழக்கு எதாவது தாக்கல்செய்தேனா என்றால் இல்லை. பதிவு செய்யப்படாத ஒரு உயில் சாசனத்தை கொண்டு நான் என் மனைவிக்கு எழுதி வைத்துள்ள தான செட்டில்மென்ட் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் முத்துசாமி, விஜயலட்சுமி, சக்திவேல் என்கிற பிரகாஷ் ஆகியோர்களின் அம்மா இளையம்மாளுக்கு என் அப்பாவே நல்ல முறையில் சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்தார் என்றால் ஆமாம். என் அக்காக்கள் இளையம்மாள் மற்றும் தெய்வானை ஆகியோர்களுக்கு என் அப்பாவே திருமணம் செய்து வைத்தார். வாதி சிவானந்தம் நீல்கிரிஸ் பால்பண்ணையில் வேலை செய்த பின்னிட்டு அவரும் இரயில்வே துறையில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் 1993ல் நிரந்தர பணி பெற்றார். 1992ம் வருடத்திலேயே அவர் பணிக்கு சேர்ந்தார் என்றால் அது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படுவது அவரது பணி ஆணை என்றால் அது எனக்கு தெரியாது. நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக வாழ்ந்தபோது வாங்கியதுதான் தாவா 2ம் அயிட்ட சொத்து என்றாலும், அவரது பங்கை அவருக்கு கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக பொய்யான சங்கதிகளுடன் நான் எதிர் வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்து வாங்கும்போது சிவானந்தம் சிறிய வயதுடையவர், வருமானம் எதுவும் ஈட்டவில்லை. சொத்து வாங்கும் சமயத்தில் வாதி நீல்கிரீஸ் பால்பண்ணையில் சேலை செய்ததாக சற்று முன்பு சாட்சியம் அளித்தேன் என்றால் ஆமாம். 2 அல்லது 3 மாதங்கள் தான் அந்த வேலையில் இருந்தார். அப்போது வருமானத்துடன்தான் இருந்தார் என்றால் ஆமாம். 2 அல்லது 3 மாதங்கள்தான்

**Copy of Deposition**

வேலையில் இருந்தார் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் எனக்கு தெரிந்ததைதான் சொல்கிறேன். 2, 3மாதங்கள்தான் வேலையில் இருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1981ல் சொத்து வாங்குவதற்கு முன்பு நான் தனியாக போய்விட்டதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை, நான் வெளியில் சென்றுவிட்டதாகத்தான் சொன்னேன். வெளியில் என்றால் எங்கு என்றால் இரயில்வே வேலை விசயமாக தங்கலில் இருந்தேன். எங்கு என்று குறிப்பாக சொல்ல முடியாது. மேற்படி சங்கதிகளை எனது எதிர் வாதத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பூசா கவுண்டரும், சுப்பையனும் 07.07.1987ம் தேதியில் ஒரு சிவானந்தம், ஆர்.பி. சண்முகம் ஆகியோர்களிடமிருந்து ஒரு தொகை பெற்றுக்கொண்டதற்காக இரசீது இரத்து ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் மேற்படி இரசீது இரத்து ஆவணம் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் 5வது படித்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான்தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனத்தில் உள்ள கையொப்பமும், பி.வா.த.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தில் உள்ள கையொப்பமும் வேறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. பி. வா.த.சா.ஆ.4 உயில் சாசனம் எழுதியது வாதி சிவானந்தத்திற்கும் எனது அக்காக்கள் இருவருக்கும் தெரியும். உயில் சாசனத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள யாரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரியல்ல. என் ஒரு அக்கா தெய்வானை உயிருடன் உள்ளார். தெய்வானையை சாட்சியாக விசாரிக்க எனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லையா என்றால் இல்லை. உயில் சாசனம் எழுதிய தேதிக்கு ஆறு மாதத்திற்கு முன்பிருந்தே உடல்நிலை சரியில்லாமல் தான் இருந்தார் என்றால் சரியல்ல. நல்ல திடகாத்திரமாகத்தான் இருந்தார். ஓய்வூதியம் பெற்று வந்தார். திடீரென்று 2 நாட்களில் இறந்துவிட்டார். சாட்சி தன்னிச்சையாக என் அப்பா, அம்மா இறந்தபோது இருவருக்கும் வாதி எவ்வித சடங்கும் செய்யவில்லை என்று கூறுகிறார். அம்மா இறந்தபோது சடலத்தை எனது வீட்டில்தான் வைத்திருந்தேன் என்றால் 10 வருடமாக என் அம்மா வீட்டில்தான் வைத்து பராமரித்தேன் என்பதால் அவர்

இறந்தபோது சடலம் என் வீட்டில்தான் இருந்தது. 10 வருடங்களாக எனக்கும் வாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லையா என்றால் அதற்கு முன்பிருந்தே இல்லை. 15 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை. எனக்கும் என் தம்பிக்கும் இடையில் சுமார் 15 வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லாததால்தான் அப்பா, அம்மா இறப்பிற்கு அவர் வரவில்லை என்றாலும் அவர் தனியாக காரியங்கள் செய்து கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அவர் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரைக்கு வாதி பதில் வழக்குரை தாக்கல் செய்த விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்னுடைய முகவரியை தவறாக குறிப்பிட்டிருந்தார். நான் குடியிருப்பது ராஜவீதி, 10 வது வார்டு ஆகும். கருப்பண்ண கவுண்டர் வீதி என்று தவறாக குறிப்பிட்டிருந்தார். முகவரியினால் இந்த வழக்கிற்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் எனக்கு எழுதி கொடுத்த உயில் தயார் செய்யப்பட்ட என்று குறிப்பிட்டிருந்த போதிலும் நான் அதற்கு கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 1 மற்றும் 2வது அயிட்ட சொத்துக்களில் வாதிக்கும் பங்கு உள்ளது என்றாலும் அதை மறைத்து அவரை ஏமாற்றும் நோக்கில் பி.வா.சா.ஆ.4 உயில் சாசனம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1993ல் வீடு கட்ட நான் அனுமதி வாங்கிய சமயத்தில் அந்த சொத்து எனது அப்பா பூசாகவுண்டர் பெயரில்தான் இருந்தது என்றால் இல்லை. 1987ல் பஞ்சாயத்து கறார் செய்யப்பட்டு விட்டது. அந்த பஞ்சாயத்து பாககறார் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஒரு ஆவணமும் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றாலும் நானே மேற்படி ஆவணங்களை மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்துகாரர்கள் சாட்சி கையொப்பங்கள் செய்தவர்கள் தற்போது உயிருடன் இல்லை. 1987ல் கூரை வீட்டிற்கு என் பெயரில் மின் இணைப்பு பெற்றேன். மின் இணைப்பு எண்.155 ஆகும். இரண்டாவது முறை பெற்ற மின் இணைப்பு எண்.256. 1987ம் வருடம் பாகக்கறார் ஆன சொத்திற்கு மீண்டும் ஏன் பி. வா.த.சா.ஆ.4 உயில் சாசனம் எழுதப்பட்டது என்றால் வீடு கட்ட வங்கியில் கடன் பெற என் அப்பா மேற்படி உயில் சாசனத்தை எழுதி வைத்தார். ஆனால் அதன்பிறகு நான் கடன் வாங்கவில்லை. என் மனைவியின் நகைகளை

## Copy of Deposition

விற்று நான் வீடு கட்டினேன். அவ்வாறு கடன் பெறவில்லை என்றால் உயில் சாசனத்தை இரத்து செய்திருக்கலாமே என்றால் என் அப்பா இரத்து செய்யவில்லை. நான் சொல்லும் சங்கதிகள் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பதிவு செய்யப்படாத ஆவணத்தினால் ஏற்படுத்தப்பட்ட பரிவர்த்தனைகள் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.03.23 14:59:10 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |